

மகாராஷ்டிரா மாநிலம், புனே நகரிலுள்ள எம்.ஐ.டி. பல்கலைக்கழக வளாகத்தில் தேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் மாநாடு எனும் அமைப்பின் சார்பில் பிப்ரவரி 8, 9 தேதிகளில் நடைபெற்ற Capacity Building Programme எனும் கருத்தரங்கில் கலந்துகொண்ட கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அக்கருத்தரங்கச் சான்றிதழைக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான தளபதி அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.2.2025) பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளின் பராமரிப்பு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என். நேரு, தா.மோ. அன்பரசன், வி. செந்தில் பாலாஜி, மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம். கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு மின்வாரிய நிறுவனத்தின் தலைவர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோடக், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலாளர் சு.பிரபாகரன். மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லை பொருநை அருங்காட்சியகம் ஏப்ரல் மாதம் முடிக்கப்படும்!

# பெருவெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை செப்பனிட ஒன்றிய அரசு நிதி தர வேண்டும்!

## நெல்லையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு பேட்டி!

நெல்லை, பிப்.20-

நெல்லை பொருநை அருங்காட்சியகம் பணிகளை ஏப்ரல் மாதம் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. என்றும் கனமழை பெருவெள்ளத்தால் சேதம் அடைந்த சாலைகளை செப்பனிட ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதி கிடைக்கப் பெறாமல் இருக்கிறது. பாஸ்ட் டேக் புதிய விதிமுறைகள் மக்கள் மீது செலுத்தப்படும் சுமை. தளர்வுகள் ஏற்படுத்த ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்படும் என்றும் நெல்லையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

பொருநை ஆற்றங்கரையில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் கிடைக்கப் பெற்ற பொருட்களை காட்சிப்படுத்தி தமிழர் நாகரிகத்தை உலகறிய செய்யும் வகையில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நெல்லை ரெட்டியார்பட்டி குலவணிகர் கிராமத்தில் ரூ 56 கோடி 36 லட்சம் மதிப்பீட்டில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்த பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் அதிகாரி களிடம் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பாக கேட்டறிந்தார். தொடர்ந்து பொதுப்பணித்துறை அரசு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நெடுஞ்சாலைத்துறை அரசு செயலாளர் இரா.செல்வராஜ்,மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா.சுகுமார், மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, மற்றும் துறை சார்ந்த அலுவலர் களுடன் முன்னேற்றப் பணிகள் குறித்தும் மாவட்டத்தில் நடந்து வரும் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை பணிகள் தொடர்பாகவும் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் கூறியதாவது.

**தமிழர்களுடைய வரலாற்று அடையாளங்கள்!**



முதலமைச்சர் அவர்களின் இந்த திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற காலத்தில் இருந்து தமிழர்களின் அடையாளங்கள் உலகத்திற்கே தெரிய வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு முன்னெடுப்பு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார். அந்த வகையில் மதுரை கீழடியில் தமிழர்களுடைய வரலாற்று அடையாளங்கள் எல்லாம் வகைப்படுத்தி, முறைப்படுத்தி காட்சி படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்கள் எல்லாம் வந்து போகும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நெல்லையில் பொருநை அருங்காட்சியம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 09.09.2022 -ல் அறிவித்தார்கள் சட்டம். முதலமைச்சர் அவர்களால் 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்படி நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டி பகுதியில் பொருநை அருங்காட்சியகம் ரூ 56 கோடியே 36 லட்சம் மதிப்பில் 13 ஏக்கரில் 54,000 சதுர அடியில் அமைக்கப்பட்டு வருகிறது.

ஆதிச்சநல்லூர் தொகுதி A மற்றும் B கட்டிடம் 16,486 சதுர அடியில் தரைத்தளம் மற்றும் முதல் தளமும்,சிவகளை கட்டிடம் 8991 சதுர அடியில் தரைத்தளம்,முதல் தளம்,கொற்கை தொகுதி A மற்றும் B கட்டடம் 17429 சதுர அடி தரைத்தளம், முதல் தளம் எனவும். மேலும் அறிமுக காட்சி கட்டிடம் கைவினைப் பொருட்கள் பணிமனை,ஒப்பனை அறைகள் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது. மேலும்அகலாய்வு நடத்தப்பட்ட இடங்களான கொற்கை, ஆதிச்சநல்லூர் சிவகளை,உள்ளிட்ட பகுதிகளில் கிடைக்கப்பெற்ற பொருட்களை வைப்பதற்கு தனி தனியாக கட்டிடங்கள் 7 பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. தற்போது 75 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளது. கலைவடிவம் செய்வது,ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இணைப்பு சாலை அமைக்கவும், மின்விளக்குகள்,பூங்காக்கள் வண்ண விளக்குகள்,வர்ணம்பூசுவது திறந்தவெளி திரையரங்கம்,அழகு நிறைந்த குளம்,குளத்தின் மீது பாலம் அமைக்கவும், சுற்றுச்சுவர்,நீரூற்று அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது.

மே15 ம் தேதி வரை பணிகள் முடிக்க கால அவகாசம் இருக்கும் நிலையில் ஏப்ரல் மாதத்திற்குள் (அதாவது 30.04.2025)அருங்காட்சியக பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டு ள்ளது. பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.நெல்லையில் நடைபெற்ற சிறப்பான நிகழ்வுகளில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு குழந்தைக்கு முத்தம் கொடுத்தது வைரலாக பரவியுள்ளது.

நெல்லை மண் முதலமைச்சர் அவர்களுக்கு மனம் நிறைந்த உணர்வுகளை ஏற்படுத்தி உள்ளது.

**பாஸ்ட் டேக் முறை அகற்றப்படும்!**

மாநில நிதியில் இருந்து நேரடியாக அமைக்கும் சாலைகளில் சுங்கசாவடி அமைக்கபடுவதில்லை. தேவைக் கேற்ப அவசரமாக போடும் சாலைகளுக்கு நிதியை உலகவங்கியில் கடனாக பெறும் போது சுங்க சாவடிகளை அமைப்பதில் தவறு இல்லை. ஒன்றிய அரசு மாநில அரசிடம் 7 மீட்டர் சாலையை 10 மீட்டர் சாலையாக மாற்றுவதாக வாங்கி கொண்டு சுங்க சாவடிகள் ஒன்றிய அரசு மூலம் அமைக்கப்படுகிறது. காலவதியான சுங்க சாவடிகளை எடுக்க ஒன்றிய அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.பெரு வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை செப்பனிட மத்திய அரசிடம் இருந்து வரவேண்டிய பணம் வரவில்லை.மாநில நெடுஞ்சாலைகளில் பணி மேற்கொள்ள வரவேண்டிய பெரும் பணம் வரமால் இருப்பதால் பணிகளில் தாமதம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.ஒன்றிய அரசிடம் 600 கோடிக்கு திட்டம் தயார் செய்யப்பட்டு அனுப்பிய நிலையில் தற்போது தான் ஒன்றிய அரசு மூலம் சிறுக சிறுக நிதி கொடுக்கப்பட்டு வருகிறது. பாஸ்ட் டேக் புதிய விதிமுறைகள் மக்கள் மீது செலுத்தப்படும் சுமை,இது தவறான செயல்.பாஸ்ட் டேக் அமைப்பை முறைப்படுத்த வேண்டும். பணம் இல்லை என்றால் அபராதம் போடுவது சரியில்லை.டெல்லி செல்லும் போது ஒன்றிய அரசிடம் புதிய விதிகளை தளர்த்த வலியுறுத்தப்படும்.நெல்லை தென்காசி சாலை பணிகள் விரைவில் முடிவடையும் என்றார்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், முன்னாள் எம்.பி ஞானதிரவியம், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜூ,சென்னை மண்டல தலைமை பொறியாளர் மணிகண்டன்,மதுரை மண்டல தலைமை பொறியாளர் செல்வராஜ்,தொல்லியல் துறை இணை இயக்குனர் சிவானந்தம், கட்டடக்கலை வல்லுநர் சோபனா கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜ்குமார்,மகாவிஷ்ணு,மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன், நடராஜன்,மாவட்ட துணை செயலாளர் நம்பி,ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன்,பரணி சேகர்,செல்வகருணாநிதி,மாவட்ட அணி அமைப்பாளர்கள் செல்வசூடாமணி, முருகன், பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை, வழக்கறிஞர் ஏ.எல்.பி. தினேஷ் தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி உள்பட கழகத்தினர், மற்றும் செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள்,அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

# ‘தமிழ்நாட்டின் நிதி எங்கே?’ மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டம்!

## பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கோலமிட்டு வெளிப்படுத்தினர்!

சென்னை,பிப்.20-

”தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாசிச பாஜக அரசைக் கண்டித்து சென்னை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் ‘தமிழ்நாட்டின் நிதி எங்கே?’ ‘StopHindiImposition’ என அனைவரின் இல்லங்களிலும் கோலமிட்டு மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டம்” நடைபெற்றது.




தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிதியினை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சென்னை மண்டல தகவல் தொழில்நுட்ப அணியினர் “தமிழ்நாட்டின் நிதி எங்கே?” மற்றும் “StopHindiImposition” என்று தங்கள் வீட்டு வாசலில் கோலமிட்டு மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும் பல்வேறு வகையில் தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய பாஜக அரசு “மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது” என்று blackmail செய்யும் தடித்தனத்தைக் கண்டிக்கின்ற வகையில், பாசிச சக்திகளின் இந்தித் திணிப்பையும், மும்மொழிக் கொள்கை என்ற மாறுவேட சொல்லாடலையும் எந்த நிலையிலும் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது என்ற திராவிட மாடல் அரசின் தலைவர் முதலமைச்சர்; கழகத் தலைவர் மற்றும் துணை முதலமைச்சர்; இளம் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா ஆலோசனையின் பேரில், ஒன்றிய அரசுக்கு தங்களது கடும் கண்டனத்தை பதிவு செய்யும் வகையில், தகவல் தொழில் நுட்ப அணியின் மாநில துணைச்செயலாளரும், சென்னை மண்டல பொறுப்பாளருமான சி.எச். சேகர் முன்னெடுப்பில் சென்னை, திருவள்ளூர் கழக மாவட்டங்களைச் சேர்ந்த தகவல் தொழில் நுட்ப அணியினர் அனைவரின் இல்லங்களிலும் ‘தமிழ் நாட்டின் நிதி எங்கே?” மற்றும் “StopHindiImposition” என்று வாசலில் கோலமிட்டு ஒன்றிய அரசுக்கு தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

மேலும், அதனை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து அனைவரும் சமூக வலைதளங்களில் பகிர்ந்து கொண்டது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. மேலும், “Stop HindiImposition” மற்றும் “ChennaiZone DMKIT wing” ஹேஷ் டேக்குகள் X தளத்தில் ட்ரெண்டிங்கில் முதன்மை இடத்தை வகித்தது குறிப்பிடத்தக்கது.

# ஒலக்கூர் ஒன்றியத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.- ஆரணி எம்.பி . தரணி வேந்தன் தொடங்கி வைத்தனர்!

திண்டிவனம், பிப்.20-

ஒலக்கூர் ஒன்றியம் நெய்குப்பி, தாதாபுரம் ஆகிய ஊராட்சிகளில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ, ஆரணி எம்.பி .தரணி வேந்தன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் நெய்குப்பி மற்றும் தாதாபுரம் ஆகிய ஊராட்சிகளில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

ஊராட்சி மன்ற தலைவர்கள் நெய்குப்பி சுதா காளி,தாதாபுரம் பூமி லிங்கம்ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் தரணி வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை விவசாயி களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், ஒன்றிய செயலாளர் ராஜாராமன்,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,ஒன்றிய அவைத் தலைவர் அமராவதி ஒன்றிய துணைச் செயலாளர் நெய்குப்பி காளி,பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர்மனோ சித்ரா ராஜேஸ்வரன்,விழுப்புரம்வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் அண்ணாதுரை, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி அமைப்பாளர் செந்தில்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜெயபிரகாஷ் உள்ளிடோர் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தூய்மை பாரத இயக்கம் மற்றும் 15வது நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் ரூபாய் 37.50 லட்சம் மதிப்பீட்டில் மயிலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளுக்கு தூய்மை பணி மேற்கொள்வதற்காக மின்கலன் வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ.கலந்துகொண்டு மின்கலன் வண்டிகளை கொடியசைத்து தொடங்கிவைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார், மணிமாறன் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.பி.கே. தங்கவேலு
### பிப்ரவரி 20 (2017)



**ஆலங்குடி பகுதியில், கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற துவக்கிய இவர், ஆலங்குடி வட்ட துணைச் செயலாளர், திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து பணியாற்றிய இவர், மறைவெய்தியபோது புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றினார்.**

**பாத்தம்பட்டி ஊராட்சி தலைவராகவும், திருவரங்குளம் ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**